வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-வான்மதி

தேதி 16.11.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி நைஜிரியா, பிரேசில் மற்றும் கயானா ஆகிய நாடுகளுக்கு 5 நாள் பயணமாக இன்று புறப்பட்டார்.

வளர்ச்சியை மட்டுமே தாரக மந்திரமாக கொண்டு தமது அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுச்சேரியில் தேசிய ஞான கும்பம் விழா வரும் 21 ஆம் தேதி தொடங்க உள்ளதாக அமைச்சர் திரு நமச்சிவாயம் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி-காரைக்காலில் வரும் 21 ஆம் தேதி வரை மழை நீடிக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*பிரதமர் பயணம் (17)*

பிரதமர் திரு நரேந்திர மோடி நைஜிரியா, பிரேசில் மற்றும் கயானா ஆகிய நாடுகளுக்கு 5 நாள் பயணமாக இன்று புதுடெல்லியில் இருந்து புறப்பட்டார். மேற்கு ஆப்பிரிக்கா பிராந்தியத்தில், இந்தியாவின் நெருங்கிய நட்பு நாடான நைஜிரியாவிற்கு இதுவே தனது முதல் பயணம் என்று பிரதமர் தனது புறப்பாடு அறிக்கையில் தெரிவித்தார். நைஜிரியாவில் உள்ள இந்திய சமூகத்தினரையும் ஹிந்தியில் தனக்கு வரவேற்பு செய்திகளை அனுப்பிய நைஜிரிய மக்களையும் சந்திக்க ஆவலாக உள்ளதாக தெரிவித்துள்ளார். பிரேசிலில் நடைபெற உள்ள 19 ஆவது ஜி 20 உச்சி மாநாட்டிலும் பிரதமர் கலந்து கொள்ள உள்ளார். இந்த உச்சி மாநாட்டின் போது பல உலக தலைவர்களுடன் இரு தரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடலில் பங்கேற்க இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்துவதாக பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். தொடர்ந்து கயானா நாட்டிற்கு செல்லும் பிரதமர் திரு நரேந்திர மோடி 2 ஆவது இந்தியா-காரிக்கோ உச்சி மாநாட்டில்

கரிபியன் கூட்டாளி நாடுகளின் தலைவர்களுடன் கலந்து கொள்ள உள்ளார். 50 ஆண்டுகளுக்கு பிறகு இந்திய பிரதமர் ஒருவர் கயானா நாட்டிற்கு செல்வது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத் தக்கது.

தேர்தல் (16)

மகராஷ்டிர மாநிலத்தில் மொத்தம் உள்ள 288 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும் ஜார்கண்ட் மாநிலத்தில் மீதமுள்ள 38 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும் வரும் புதன் கிழமை வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில், அங்கு அரசியல் கட்சியினரின் தேர்தல் பிரச்சாரம் சூடு பிடித்துள்ளது. இன்று மகராஷ்டிர மாநிலம் சோலாப்பூர், பூனேயில் பிஜேபி வேட்பாளருக்கு ஆதரவாக அக்கட்சியின் மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு நிதின் கட்கரி பிரச்சாரம் மேற்கொண்டார். காங்கிரஸ் கட்சியின் வேட்பாளருக்கு ஆதரவாக அக்கட்சியின் மூத்த தலைவர்கள் திரு ராகுல்காந்தி, திருமதி பிரியங்கா காந்தியும், தேசிய வாத காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு அஜித்பவார் உள்ளிட்டோரும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டனர். இதனிடையே, ஜார்கண்ட் மாநிலம் தும்காதியோகரில் பிஜேபி மூத்த தலைவரும் மத்திய அமைச்சருமான திரு அமித்ஷா பேரணியில் பங்கேற்கிறார். காங்கிரஸ் கட்சி தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே அம்மாநிலத்தின் ஜம்தாரா, கிஜ்ரியில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகிறார். இரு மாநிலங்களில் பதிவாகும் வாக்குகள் வரும் 23 ஆம் தேதி எண்ணப்படும்

மோடி (15)

வளர்ச்சியை மட்டுமே தாரக மந்திரமாக கொண்டு தமது அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். புதுடெல்லியில் நாளிதழ் ஒன்றின் சார்பில் இன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர், மத்தியில் முன்பு ஆட்சி பொறுப்பில் இருந்தவர்கள் வாக்குவங்கி அரசியலுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து செயல்பட்டதாக குற்றம் சாட்டினார். பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு மக்கள் நலனுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து கொள்கைகளை வகுத்து, திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார். பெரும் நாடுகளில் நடைபெற்ற தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதை சுட்டிக் காட்டிய அவர், நமது நாட்டை பொருத்தவரை 3 ஆவது முறையாக தேசிய ஜனநாயக கூட்டணிக்கு மக்கள் ஆதரவு அளித்திருப்பதை குறிப்பிட்டார். வளர்ச்சியடைந்த இந்தியாவை

உருவாக்க வேண்டும் என்பதில் தமது அரசு உறுதியுடன் உள்ளதாகவும், மக்களுக்காக, மக்களின் வளர்ச்சி என்ற நிலையில் தமது அரசு செயல்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

*ஓம்பிர்லா* (10)

நாட்டில் உள்ள தணிக்கை அமைப்புகள் வெளிபடைத் தன்மையுடன் செயலாற்றி வருவதாக மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா தெரிவித்துள்ளார். தணிக்கை தினத்தை ஒட்டி இன்று புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர், சர்வதேச அளவிலான அங்கீகாரத்தை நமது நாட்டின் தணிக்கை அமைப்புகள் பெற்றிருப்பதாக பாராட்டினார். ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 16 ம் தேதி இந்திய தலைமை கணக்கு தணிக்கையாளர் நிறுவனம் தொடங்கப்பட்டதையும், நல்ல நிர்வாகம், வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புணர்வுடன் கூடிய அதன் பங்களிப்பை நினைவுகூறும் வகையில் இந்நாள் கொண்டாடப்படுவது குறிப்பிடத் தக்கது.

*அஸ்வினி வைஷ்ணவ்* (9)

மகராஷ்டிராவில் 1 லட்சத்து 64 ஆயிரத்து 605 கோடி ரூபாய் செலவில் ரயில்வே கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். மும்பையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அம்மாநிலத்தில் 6 ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவிற்கு புதிய ரயில் வழித்தடங்கள் அமைக்கப்பட்டு வருவதாக கூறினார். நாட்டின் முதல் இந்திய படைப்பாற்றல் தொழில் நுட்ப நிறுவனம் மும்பையில் நிறுவப்படும் என்றும், இதற்கு மத்திய அமைச்சரவை ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளதால் விரைவில் பணிகள் தொடங்கப்படும் என்றார்.

*முருகன்* (8)

தேசிய பத்திரிக்கையாளர்கள் தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், ஜனநாயகத்தின் முதுகெலும்பாக பத்திரிக்கையாளர்கள் திகழ்வதாக புகழாரம் சூட்டியுள்ளார். துணிச்சலாக பணியாற்றும் பத்திரிக்கையாளர்களுக்கு இந்நாளில் தனது வாழ்த்துக்களை தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ள அவர், சுதந்திரத்தின் ஒளி விளக்காக பத்திரிக்கைகள் திகழ்வதாகவும் அவர் தனது வாழ்த்து செய்தியில் பதிவிட்டுள்ளார்.

கண்காட்சி (14)

இன்று புதுடெல்லியில் நடைபெற்ற 43 ஆவது இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சியில் குறு-சிறு மற்றும் நடுத்தர நிறுவனத்தின் அரங்கினை அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு ஜிதன்ராம் மான்ஜி திறந்து வைத்தார். இந்த ஆண்டு பசுமையான தொழில்நுட்பங்களை பின்பற்றவதை கருப்பொருளாக கொண்டு இந்த கண்காட்சி நடைபெறுகிறது. பிரதமர் திரு நரேந்திர மோடியால் தொடங்கப்பட்ட விஷ்வகர்மா திட்டமும் இந்த கண்காட்சியில் சிறப்பான இடத்தை பிடித்துள்ளது. 29 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த தொழில்நுட்ப பிரதிநிதிகள் 200 க்கும் மேற்பட்டோர் இந்த கண்காட்சியில் பங்கேற்று தங்களது படைப்புகளை காட்சி படுத்தி உள்ளனர். குறிப்பாக, ஜவுளி, கைத்தறி, கைவினை பொருட்கள், எம்பிராய்டரி, தோல் பொருட்கள், கரும்பு மற்றும் மூங்கிலால் செய்யப்பட்ட கைவினை பொருட்கள் மற்றும் மண்பாண்டங்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான பொருட்கள் காட்சிபடுத்தப்பட்டுள்ளன.

நமச்சிவாயம் 1 (18)

கல்வி மேம்பாட்டு அமைப்பு, புதுச்சேரி பல்கலைக்கழகம் மற்றும் புதுச்சேரி அரசும் இணைந்து புதுச்சேரியில் தேசிய ஞான கும்பம் 2024 விழாவை நடத்த உள்ளதாக கல்வித்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் தெரிவித்துள்ளார். இன்று செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர், இந்த விழா, வருகிற 21 ம் தேதியில் இருந்து 23 ஆம் தேதி வரை 3 நாட்கள் புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் நடைபெறும் என்றும், இந்திய அறிவு முறைகளை கொண்டாடுதல், தாய் மொழி வழி கல்வியை செயல்படுத்துதல் ஆகியவை இந்த விழாவின் நோக்கம் எனவும் கூறினார்.

இவ்விழாவில், துணை நிலை ஆளுநர், முதலமைச்சர், உத்தரகாண்ட் மாநில கல்வியமைச்சர் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ள இருப்பதாகவும், அவர் தெரிவித்தார். இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்து பேராசிரியர்கள், கல்வியாளர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு கற்றல்களை ஊக்குவிப்பது தொடர்பான கலந்துரையாடல்களை நடத்த உள்ளதாகவும், அறிவு சார்ந்த பல்வேறு கண்காட்சிகள் இடம் பெற உள்ளதாகவும் அமைச்சர் திரு நமச்சிவாயம் கூறினார். மேலும் அவர் கூறுகையில், பள்ளி மாணவர்களுக்கு இலவச பேருந்து இயக்குவதை போல் கல்லூரி மாணவர்களுக்கும் தனியாக பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

*திறப்பு விழா* (10)

புதுச்சேரி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் மாவட்ட சட்டப்பணிகள் ஆணையத்தின் செயலாளர் அலுவலகம் இன்று திறக்கப்பட்டது. சிறப்பு விருந்தினராக சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியும், புதுச்சேரி மாநில சட்டப்பணிகள் ஆணைய செயல் தலைவருமான நீதிபதி சுந்தர் நீதிபதிகள் ஆஷா, சரவணன், அம்பிகா ஆகியோர் கலந்து கொண்டு மாவட்ட சட்டப் பணிகள் ஆணையத்தின் செயலாளர் அலுவலகத்தை திறந்து வைத்தனர். இவ்விழாவில், புதுச்சேரி அரசு சட்டத் துறை செயலர் சத்தியமூர்த்தி, புதுச்சேரி தலைமை நீதிபதி சந்திரசேகரன், காரைக்கால் மாவட்ட நீதிபதி முருகானந்தம் வழக்கறிஞர்கள் மற்றும் சட்ட தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

*வானிலை* (13)

மன்னார் வளைகுடா மற்றும் இலங்கை கடலோர பகுதிகளின் மேல், வளிமண்டல் கீழடுக்கு சுழற்சி நிலவுவதாலும், இத்துடன் லட்சத்தீவு மற்றும் அதனை ஒட்டிய தென் கிழக்கு அரபிக் கடல் பகுதியில் நிலவிய வளி மண்டல் கீழடுக்கு சுழற்சி வலுவிழந்து வருவதாலும், தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்காலிலும் வரும் 21 ஆம் தேதி வரை மழை நீடிக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனிடையே, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகை, தஞ்சை, அரியலூர், தென்காசி, தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னாயாகுமாரி ஆகிய 11 மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி-காரைக்காலிலும் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரியில் நகர மற்றும் கிராமப்புறங்களில் இன்று பரவலாக மழை பெய்து வருகிறது. காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் மழை காரணமாக ஒகேனக்கலில் நீர் வரத்து வினாடிக்கு 10 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

*சான்றிதழ் சரிபார்ப்பு* (10)

புதுச்சேரி பொதுப்பணித்துறையில் இளநிலை பொறியாளர்கள் மற்றும் ஓவர்சீர் பணிக்கு எழுத்து தேர்வில் தேர்வானவர்களுக்கான சான்றிதழ் சரிபார்ப்பு வரும் 26 ஆம் தேதி முதல், 29 ஆம் தேதி வரை நடைபெறும் என பொதுப்பணித்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. இளநிலை பொறியாளர் பணிக்கு தேர்வான 99 பேருக்கு நவம்பர் 26 மற்றும் 27 ஆம் தேதிகளிலும், ஓவர்சீர் பணிக்கு

தேர்வானவர்களுக்கு நவம்பர் 29 ஆம் தேதி சான்றிதழ் சரிபார்ப்பு புதுச்சேரி பொதுப்பணித்துறை மத்திய அலுவலகத்தில் உள்ள செயற்பொறியாளர் அலுவலகத்தில் நடைபெறும் என அச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்படுகிறது.

*காரைக்கால்* (8)

காரைக்கால் கிளைச் சிறையில் மாவட்ட ஆட்சியர் திரு மணிகண்டன் திடிர் ஆய்வு மேற்கொண்டார். கிளைச் சிறையில் கைதிகளுக்கு பாதுகாப்புகள் சரியாக செய்யப்பட்டுள்ளதா என்றும், அவர்களுக்கு வழங்கப்படும் குடிநீர் மற்றும் உணவுகள் தரமாக உள்ளதா என்றும் மாவட்ட ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டதாக சிறைத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆய்வின் போது, காரைக்காலில் அடுத்த ஆண்டு புதிய சிறைச்சாலை கட்டுவதற்கு அரசு சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி நைஜிரியா, பிரேசில் மற்றும் கயானா ஆகிய நாடுகளுக்கு 5 நாள் பயணமாக இன்று புறப்பட்டார்.

வளர்ச்சியை மட்டுமே தாரக மந்திரமாக கொண்டு தமது அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுச்சேரியில் தேசிய ஞான கும்பம் விழா வரும் 21 ஆம் தேதி தொடங்க உள்ளதாக அமைச்சர் திரு நமச்சிவாயம் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி-காரைக்காலில் வரும் 21 ஆம் தேதி வரை மழை நீடிக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.